# வடக்குக்கு லொறிகள் மூலம் உணவுப் பொருள்கள்!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 13 இதழ் 15
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-2-1994

(கொழும்பு)
வடபகுதிக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை லொறிகள்மூலம் அடுத்தமாதம் தொடக்கம் கிரமமாக அனுப்புவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான புதிய திட்டம் ஒன்றை புனர் வாழ்வு அமை

(4ம் பக்கம் பார்க்க)

## கொத்தலாவல ராணுவத்திலிருந்து நீக்கம்

(கொழும்பு)
லெ. ஜெனரல் கொத்தலாவல இராணுவ சேவையிலிருந்து நிரந்தரமாக நீக்கப் பட்டுள்ளார்.
ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவின் பணிப்பின் பேரில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு இவ்வருடம் பட்ஜெட் இல்லை

(கொழும்பு)
இவ்வருடம் நாடாளுமன்றத்தில் வரவு—செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படமாட்டாது என பிரதமர் ரணில் விக்கி

(4ம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பு:

# தலைவர் பிரபா பணிப்பின்பேரில்

# இரு யுத்தக்கைதிகள் விடுதலை!

## கொழும்பு பேராயர்வேண்டுகோள் நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)
கொழும்பு கத்தோலிக்க பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ்பெர்னாண்டோ விடுத்த வேண்டுகோளை ஏற்று விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் இரு யுத்தக் கைதிகளை நேற்று விடுதலை செய்தார்.

கொழும்பிலிருந்து சமாதானக் குழுக்கள் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் முகமாகவே தலைவர் பிரபாகரன் இவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமது சமாதான முயற்சிக்கு ஊக்கம் கொடுக்கும் முகமாக இரு யுத்தக்கைதிகளை விடுதலை செய்யுமாறுகோரி திரு. பிரபாகரனுக்கு தமது பிரதிநிதியான அகில இலங்கை கத்தோலிக்க துறவிகள் சபைத் தலைவர் அருட். அலெக்ஸாண்டர் மூலம் கொழும்பு பேராயர் விசேட செய்தியொன்றை நேற்று அனுப்பியிருந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவருக்கே நன்றி

(யாழ்ப்பாணம்)
எமது விடுதலைக்காக நாம் ஒருபோதும் அரசுக்கு நன்றி சொல்லமாட்டோம் புலிகளின் தலைவருக்கும் ஏனைய உறுப்பினருக்குமே எமதுமனம்கனிந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு நேற்று விடுதலை செய்யப்பட்ட இரு பொலிஸாரும் தெரிவித்தனர்; திலகரத்தின பண்டார என்ற கான்ஸ்டபிள் மேலும் கூறுகையில்;

நாம் கைதிகளாக இருந்த காலத்தில் புலிகள் எம்மை நன்கு கவனித்தார்கள். எதுவித குறையுமே கூறுவதற்கில்லை. எமது பெற்றோர் வந்து எம்மை பார்வையிட உதவி செய்த தலைவர் பிரபாகரன் மற்றும் புலிகளின் பிரமுகர்களுக்கு நாம் மீண்டும் நன்றி கூறுகிறோம். எமதுவிடுதலைக்கு உதவிய கத்தோலிக்க மத அமைப்புகளுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

எம்மைப் போல் இங்கு கைதிகளாக இருக்கும் ஏனையவர்களுக்கும் விரைவில் விடுதலை கிடைக்குமென நம்புகிறோம். இதற்காக எம்மாலான எந்த முயற்சியையும் நாம் அங்கு சென்று மேற்கொள்வோம்.

இங்குள்ள நிலைமைகளை நாம் தென்பகுதியில் கூறுவோம். யாழ்ப்பாண மக்க

(4-ம் பக்கம் பார்க்க)

### எதிரணியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில்

## நாடாளுமன்றம் மார்ச் 22-ம் திகதிவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)
எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நாடாளுமன்றம் எதிர்வரும் மார்ச் மாதம் 22ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் மூலம் அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தை எதிர்வரும் மாதம் 22 ம் வரை ஒத்திவைப்பதென முடிவுசெய்யப் பட்டது.

இந்த வாக்கெடுப்பை அடுத்து பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த பிரதான அமைப்பாளர் ரிச்சர்ட் பத்திரன, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, சமாஜவாத எக்சத் பெரமுனவைச் சேர்ந்த அத்தாவுட செனவிரத்ன ஆகிய எம். பிக்கள் தமது கடும்எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் சமர்ப்பிக்கவுள்ள வேளையில், தென்மாகாணசபைத்தேர்தலில் தாம் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்துக்காகவே நாடாளுமன்றம் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. -இ

## கடற் படையினர் பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
கடற்படையினர் நேற்றுக் காலை கல்முனை, பூநகரிப் பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று அதிகாலை கல்முனைக் கப்பால் [illegible] பாரிய கடற்படை கப்பல் காலை ஆறு மணிக்கு கல்முனை, பூநகரிப்பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலை நடாத்தியது.

(4ம் பக்கம் பார்க்க)

### பொருட்கள் விலை உயர்வு:

## ஆர்ப்பாட்ட பேரணி தற்காலிக ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
கப்பல் கட்டணம், விலை உயர்வு ஆகியனவற்றைக் கண்டித்து மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ். நகரில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியையும் மறியல் போராட்டத்தையும் தற்காலிகமாக ஒத்திவைப்பதென நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புகள் ஒன்றியத்தின்

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கை பிரிப்பேன் - ஜனாதிபதி

(கொழும்பு)
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் பின் வடக்கு-கிழக்கை பிரிக்கப் போவதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கூறியுள்ளார்.

ஐ. தே கட்சியின் மாவட்ட சம்மேளனக் கூட்டம் ஒன்றில் கலந்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது; வடக்கு- கிழக்கை பிரித்து அதன் மூலம் தமிழர்களுக்கு உண்மையில் நலம் இல்லை என்பதனை நிரூபித்து இப்போதுள்ள பயங்கரவாதப் புண்ணை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

### பாப்பரசரின் இல. விஜயம்:

## வத்திக்கான் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பு வருகை

(கொழும்பு)
பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர், அடுத்த வருடம் இலங்கை வருவது தொடர்பாக பாது

(4-ம் பக்கம் பார்க்க)

## காமினியை அமைச்சராக்க டி. பி. அவசர போக்கு - ரிச்சார்ட்பத்திரன

(கொழும்பு)
திரு. காமினி திசாநாயக்காவை எம்பியாக நியமித்து தற்போது ஜனாதிபதி டி. பி. அவரை ஒரு அமைச்சராக்குவ

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### "கோர்க்கி" தேவை

எமது நிறுவனத்துக்கு பேணிடச, சூகியம், மட்டன் ரோல், மஸ்கட், மிக்சர் தயாரிப்பதில் அனுபவமுள்ள "கோர்க்கி" தேவை. சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். ரவி கோப்பி பார், 324, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். எ-3858

### விற்பனைக்கு

சுத்தோசர் மேசைகள், கபேட், அலுமாரிகள், கண்ணாடி, சோக்கேஸ் சிறியது 3/4, 1/2 கோஸ்பவர் அசன் மோட்டர்கள், மீன் தொட்டி என்பன விற்பனைக்குண்டு. கி. நாதன், இல. 16/3, விநாயகர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(கி-829)

### வாருங்கள் திருத்திப்பாருங்கள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப்பாகங்களுக்காக நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டிவ்கர வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [ஏ-3848]

### வர்ண வேலைகள்

விளம்பரப் பலகை, இலக்கத் தகடுகள், மனித உருவப் படங்கள், கடைவர்ணம் தீட்டுதல், வீடுகள் வர்ணம் தீட்டுதல், கோலங்கள் வரைதல், சாமி உருவப்படங்கள் ஆகிய வர்ண வேலைகளும் குறித்த தவணையில் ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும். பூபதி ஆட்ஸ். தொடர்பு முகவரி: டிவ்கர வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமையில்)

[எ 3845]

### உங்கள் வாழ்வை சீர்படுத்திக் கொள்ள...

பலருக்கு அதிர்ஷ்டமான எண்ணில் பெயர் இல்லாதுவிட்டாலும், துரதிஷ்டமான பெயர் இருக்கிறது. வாழ்வில் தடைகள், மாறாத நோய்கள் நீங்க, உங்கள் பெயரைச் சீரமைத்துக் கொள்ள, மற்றும் பலன்கள் விளக்கங்களுடன் "ஸ்ரீவாணி எண் ஜோதிடம்" எங்கும் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. விலை ரூ. 25/-

(கி-826)

தமிழகத்தில்

### பஸ் விபத்தில் 9 பேர் பலி

(சென்னை)

தமிழ்நாட்டில் காமராஜர் மாவட்டம் - சிவவிபுத்தூருக்கு அருகேநேற்று முன்தினம்மாலை நடந்தசாலை விபத்தில் 9 பேர் இறந்தனர் மற்றும் 81 பேர் காயமுற்றனர்.

அரசுக்கு சொந்தமான பஸ் ஒன்று கட்டுபாடு இழந்து மதில்மீது மோதி குடைசாய்ந்து உருண்டதாலும், அதிகம் பயணிகள் இருந்ததாலும் பஸ்ஸில் இறந்தோர், காயமுற்றோர் எண்ணிக்கை அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டது. (கே-கி)

---

# இளம் கலைஞர் மன்றம்

# 14 - வது இசைவிழா

இடம்: கலா மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

14ம் நாள்
25-2-94 வெள்ளிக்கிழமை

ஈ. எஸ். பேரம்பலம்
வர்த்தக நிறுவனத்தின்
ஆதரவில்

**மாலை 4-00 — 5-00 மங்கள இசை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| எம். சிவசுப்ரமணியம் | என். ராமு |
| எஸ். செல்வகுமார் | என். ரவீந்திரன் |
| வீ. செல்வராஜா | ஆர். ரஞ்சன் |
| வீ. வரதராஜா | வீ. சபேசன் |
| | ஆர். முருகதாஸ் |

**5-00 — 5-20 பாட்டு**

எஸ். பாலமுருகன், எஸ். சாருமதி, வீ. ஸ்ரீலேகா, வீ. பேரவாணி, எஸ். ஹம்சானந்தி — பாட்டு
எஸ். சுகிர்தா — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

**5-20 — 5 40 வீணை இசை**

நாகச்சந்திரா அரவிந்தன், தயானி நாகச்சந்திரா — வீணை
பி. ரதிரூபன் — மிருதங்கம்

**5-40 — 6-15 பாட்டு**

கே. சுகிர்தா — பாட்டு
எஸ். சிவகௌரி — வயலின்
பி. ரதிரூபன் — மிருதங்கம்

**6-15 — 7-00 பாட்டு**

பரமேஸ்வரி கணேசன் — பாட்டு
சாந்தநாயகி சுப்ரமணியம் — வயலின்
கே. கண்ணதாசன் — மிருதங்கம்

**7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்**

திரு. பே. நாகரெத்தினம் ஈ. எஸ். பி.
திரு. கே. கே. ஏ. கந்தையாபிள்ளை
திரு. பூ. சசிதரன். திரு. ந. சத்தியரூபன் (மிறிநதியா)

அருள்உரை:
பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர குருக்கள்
(பிரதமகுரு துர்க்கை அம்மன் தேவஸ்தானம் தெல்லிப்பளை)

தலைவர்:
திரு. சி. வி. கே. சிவஞானம்
(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி
செ. சம்பந்தநாதன்.
(முகாமைவாளர் இ. வங்கி. உ-ம் கிளை)

சிறப்பு விருந்தினர்:
திருமதி பி. எஸ். ஸ்கந்தராஜா
(அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)

**7-30—8-30 கெஞ்சிறக்கச்சேரி**

பி. நாகேந்திரம் — நாதஸ்வரம்
ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
கே கண்ணதாசன் — மிருதங்கம்
பி. கணேசன் — தவில்
சதா வேல்மாறன் — கடம்

**8-30 — 9-30 பரதநாட்டியம்**

விக்னேஸ்வரி சரவணமுத்து

வாழ்த்துவோர்:

## சிறி நதியா ஜூவெல்லர்ஸ்

2 ஜி, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ 3826)

---

## யாழ்ப்பாண மாநகரசபை
## துவிச்சக்கர வண்டிக்கான உரிமம் — 1994

1994-ம் ஆண்டிற்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறுதவர்கள்

**31 - 3 - 1994க்கு முன்**

அவற்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1994 - 02 - 24.

(ஏ-3891)

---

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
## D. A. M. இறுதிப்பரீட்சை - 1993

மேற்படி பரீட்சை 26-4-94ல் கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளதென ஆயுர்வேத திணைக்களம் அறிவித்துள்ளது. பரீட்சைக்குத் தோற்றுவோர் உடனடியாகக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நா. வாமதேவன்
அதிபர்.

127, ஸ்ரான்லி வீதி,
அர்ச்சுனவீதி,
யாழ்ப்பாணம்.

(கி 828)

---

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
## அனுமதி - 1994

தகைமை: க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி.

வைத்திய பரம்பரையில் வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 31 - 03 - 1994 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் அலுவலக நேரத்தில் ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்.

127 ஸ்ரான்லி வீதி,
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-827)

---

## அறிவித்தல்
## பாணின் விலை மீண்டும் ரூபா 8/-

யாழ். செயலகத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட பணம் இன்றிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பாணின் விலை ரூபா 1/- 25-2-94 முதல் குறைத்து ரூபா 8/-வாக் விற்கப்படுமென்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

தலைவர்,
யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.
183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(கி 830)

